6. கவன ஈர்ப்புகள்.

அ. புளியங்குடி கிராமத்தில் தீ விபத்து.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடி ஒன்றியம் கூத்தாநல்லூர் நகர பஞ்சாயத்தைச் சேர்ந்த புளியங்குடி கிராமத்தில் 28-6-1980 அன்று தீ விபத்தின் காரணமாக அரிசனங்களுக்குச் சொந்தமான வீடுகள் சேதமடைந்தது பற்றிய'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, 28-6-80 அன்று பகல் 3.30 மணியளவில் மன்னார்குடி தாலுக்காவிலுள்ள லட்சுமணன்குடி கிராமத்தில் அடங்கிய புளியங்குடியில் ஏற்பட்ட தீ விபத்தில் 22 குடியிருப்புகள் சேதமடைந்தன. உயிர்ச்சேதமோ, கால்நடைச்சேதமோ இல்லை. மொத்த சேத மதிப்பீடு சுமார் ரூ. 37 ஆயிரம். தீ விபத்து ஏற்பட்ட 28-6-80 அன்று இரவு பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடிசை ஒன்றுக்கு ரூ. 200 வீதம் நிவாரணத்தொகை வழங்கப்பட்டது. மேலும் குடும்பம் ஒன்றுக்கு 5 கிலோ அரிசியும், ஒரு வேட்டியும், ஒரு புடவையும் வழக்கம் போல் வழங்கப்பட்டது. அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பெற்றிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள புளியங்குடி கிராமத்தில் 24-க்கு மேல் குடிசைகள் எரிந்திருக்கின்றன. இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைப் பார்த்துப் பேசினோம். அதேபோல் ஹரிஜன் வெல்பேர் ஆபீஸரும் வந்து பார்த்தார். மன்னார்குடி பீ.டி.ஓ. வும் வந்து பார்த்தார்கள். அங்கே, இப்போது கொடுக்கப்படுகிற ரூ. 200 போதாது. நேற்றைய தினம் நான் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்தியதுபோல் இப்போது விலைவாசிகள் ஏறியிருப்பதால் அதன் அடிப்படையில் ரூ. 500 கொடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக உத்தரவு இடவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு புளியங்குடி, மேலவாசல், எம்பேத்தி, காரியக்கடி போன்ற கிராமங்களில் ஹரிஜன் நல இலாகா மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவு இடுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? முக்கியமாக இந்த ரூ. 500 கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

1980 ஜூலை 16]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இப்போது அரசாங்க ஆணைப்படி ரூ. 200 தான் கொடுக்கிறோம். ரூ. 500 என்பது நமது நிதி நிலைமைக்கு ஏற்றுவராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஹரிஜன் குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பது அங்கே மட்டுமல்ல, தமிழ்நாடு பூராவும் பரவலாக திட்டம் போட்டு அந்த வேலைகள் நடைபெறுகின்றன. அதே போல் தஞ்சை மாவட்டத்திற்கும் அதன் பகுதி கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆ. திருப்பரங்குன்றத்தில் 'கதம்ப வண்டு' கடித்து மூன்று பேர்கள் இறந்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ''மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் 'கதம்ப வண்டு' கடித்து மூன்று பேர் இறந்ததினால் அங்குள்ள பொது மக்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22—5—80 அன்று திரு. முத்துசாமி தேவர் என்பவர் விறகு வெட்டுவதற்காக இம்மரத்தில் ஏற, அங்கு இப்பூச்சிகள் இவரை கடித்ததினால், மரத்தில் இருந்து இறங்கி அந்த பூச்சிகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அருகிலுள்ள குளத்தில் இறங்கினார். அப்பகுதி மக்கள் அவரைக் காப்பாற்றி அப்பகுதியிலுள்ள ஒரு நாட்டு வைத்தியரிடம் சிகிச்சையளிக்கச் செய்தனர். சிகிச்சை பலனளிக்காது போகவே அவர் அன்றே இறந்துவிட்டார். இதன் காரணமாக அவ்வூர் மக்கள் அவ்வழியாகப் போவதைத் தவிர்த்தனர். அதற்குப்பின் நால்வர் அப்பூச்சியினால் கடிக்கப்பட்டனர். எவரும் இறக்க வில்லை.

திருப்பரங்குன்றம் நகராட்சி நிர்வாக அதிகாரி சுகாதார அலுவலரின் ஒத்துழைப்புடன் இம்மரத்தை எரிக்க நடவடிக்கை எடுத்தார். பெரும்பாலான பூச்சிகள் மடிந்துவிட்டன. சில பூச்சிகள் மட்டும் பறந்து அருகிலுள்ள மரத்தில் வசிக்கத் தொடங்கியுள்ளன. இம்மரத்திலுள்ள பூச்சிகளையும் அழிப்பதற்கு பூச்சிக்கொல்லி மருந்தை தெளிக்க மாவட்ட நல அலுவலர்கள் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள். இதனால் பெருமளவில் யாரும் மருத்துமனையில் அனுமதிக்கப்படவில்லை. நிலைமை அமைதியாக உள்ளது.